செய்திப் பணிப்பாளர் /செய்திஆசிரியர் 23.12.2019

## செய்தி வெளியீடு
## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100) : நவம்பர் 2019


**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**
**நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு**

தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk


2019 நவம்பர் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம், தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் (கடந்த வருடத்தின் அதே மாத தே.நு.வி.சு. மீது நடப்பு மாத தே.நு.வி.சு. இல் சதவீத மாற்றம்) அளவிடப்பட்டவாறு முதன்மைப் பணவீக்கமானது 4.1% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2019 ஒக்டோபர் மாதம் பொருட்டு பதிவாகிய முதன்மைப் பணவீக்கம் 5.6% ஆக இருந்தது. 2019 நவம்பர் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்க வீதத்திற்கான பங்களிப்புகள் முறையே 1.8%, 2.3% ஆக காணப்படுகின்றன. அதேவேளை, 1.0% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2018 நவம்பர் மாதத்தில் பணவீக்கத்திற்கான உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்தான பங்களிப்புகள் முறையே -1.8%, 2.8% ஆக காணப்பட்டன.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2019 ஒக்டோபர் மாதத்தில் பதிவாகிய 131.9 இருந்து 2019 நவம்பர் மாதத்தில் 132.9 ஆக அதிகரித்துள்ளது. இது, 2019 ஒக்டோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில், 1.0 சுட்டெண் புள்ளி அல்லது 0.8 சதவீத அதிகரிப்பொன்றைக் காட்டுகிறது. உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.78% ஆல் அதிகரித்தமை மற்றும் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.001% ஆல் சற்று குறைவடைந்தமை என்பன இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கு பங்களிப்பு வழங்கின.

உணவுப்பொருட்களின் அதிகரித்த விலைகள் அரிசி, மரக்கறி, சின்ன வெங்காயம், தேங்காய், உருளைக்கிழங்கு, பச்சை மிளகாய், மிளகாய்த்தூள், பால் மா மற்றும் தேங்காய் எண்ணெய் என்பன பொருட்டு பதிவாகின. எனினும், உணவுப்பொருட்களின் குறைந்த விலைகள் பெரிய வெங்காயம், புதிய மீன், வாழைப்பழம், பப்பாசிப்பழம், மாம்பழம் மற்றும் எலுமிச்சம்பழம் என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2019 நவம்பர் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் குறைவுக்கு காரணம், 'அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் தியக்கமருந்துகள்'(வெற்றிலை மற்றும் பாக்கு), மற்றும் 'வீடமைப்பு,நீர்,மின்வலு,எரிவாயு,ஏனைய எரிபொருள்கள்'(சமையல் எரிவாயு) ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட விலை குறைப்புக்களாகும். எனினும், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில், 'போக்குவரத்து' (விமானக் கட்டணங்கள்), 'தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு', 'நானாவிதப் பொருட்களும் சேவைகளும்' மற்றும் 'ஆடையும் காலணியும்' ஆகிய பிரிவுகளில் அதிகரித்த விலைகள் பதிவாகின. அதேநேரம், 'சுகாதாரம்', 'தொடர்பாடல்', 'பொழுதுபோக்கும் கலாசாரமும்', 'கல்வி' மற்றும் 'உணவகமும் ஹோட்டல்களும்' போன்ற பிரிவுகளின் விலைச் சுட்டெண்கள் இம்மாதத்தில் மாற்றமின்றி காணப்பட்டன.

2019 நவம்பர் மாதத்திற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்தில் தளம்பலுறும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து

போன்றன தவிர்ந்த மூலாதார பணவீக்கத்தை பிரதிபலிக்கும் மையப் பணவீக்கமானது, 2019 ஒக்டோபர் மாதத்தில் பதிவாகிய 5.6% இருந்து 5.5% வரை குறைவடைந்துள்ளது.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | | வருடத்தின் மீது வருட பணவீக்க% | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தே.நு.வி.சு | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு | தே.நு.வி.சு (மையம்) |
| **2018** | நவம்பர் | 127.7 | 127.6 | 2.2 | 0.2 | 1.0 | 3.1 |
| | டிசம்பர் | 127.1 | 127.6 | -0.5 | 0.0 | 0.4 | 3.1 |
| **2019** | ஜனவரி | 127.3 | 130.2 | 0.2 | 2.0 | 1.2 | 5.1 |
| | பெப்ரவரி | 126.7 | 131.3 | -0.5 | 0.8 | 2.4 | 5.5 |
| | மார்ச் | 126.4 | 131.8 | -0.2 | 0.4 | 2.9 | 5.8 |
| | ஏப்ரல் | 127.3 | 132.6 | 0.7 | 0.6 | 3.6 | 6.3 |
| | மே | 128.7 | 133.0 | 1.1 | 0.3 | 3.5 | 6.3 |
| | யூன் | 129.2 | 133.0 | 0.4 | 0.0 | 2.1 | 6.1 |
| | யூலை | 129.4 | 133.4 | 0.2 | 0.3 | 2.2 | 6.1 |
| | ஓகஸ்ட் | 129.7 | 133.7 | 0.2 | 0.2 | 3.4 | 5.9 |
| | செப்ரெம்பர் | 130.6 | 134.0 | 0.7 | 0.2 | 5.0 | 5.6 |
| | ஒக்ரோபர் | 131.9 | 134.4 | 1.0 | 0.3 | 5.6 | 5.6 |
| | நவம்பர் | 132.9 | 134.6 | 0.8 | 0.1 | 4.1 | 5.5 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்